| நம்மையும் நாட்டுமக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
| --- | --- |

செ.வெ.எண்:12 நாள்:06.07.2021

## *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 510 நபர்களுக்கு ரூ.3.20 கோடி மதிப்பில் 4,080 கிராம் தங்கம் மற்றும் ரூ.1.27 கோடி மதிப்பில் திருமண உதவித்தொகை வழங்கப்படும்.*

### *மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அவர்கள் தகவல்.*

---

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (06.07.2021) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில், கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்) மற்றும் திரு.டி.மதியழகன் (பர்கூர்) ஆகியோர் முன்னிலையில், **மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன்** அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளுடன், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவித்தொகை மற்றும் தாலிக்கு தங்கம் வழங்கினார்.

### மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பெண்கள், பணிக்குச் செல்லும் மகளிர், கல்வி பயிலும் மாணவியர்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களான திருநங்கைகள் என அனைவருக்கும் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், அவர்களின் வாழ்வாதாரம் உயரவும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்த சிறப்பான முறையில் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்றவுடன், பெண்கள் நலனை மேலும் பெருமைப்படுத்தும் விதமாக மகளிர் மற்றும் பணிபுரியும் பெண்கள் மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவியர்கள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் பயன்பெறும் வகையில் தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழகக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி இலவச பயணம், பால் விலை குறைப்பு, கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் மளிகைப்பொருட்கள் அடங்கிய தொகுப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள். மேலும், ஒரு குடும்பத்தை முழுவதுமாக வழி நடத்தும் குடும்ப தலைவிக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

PRO-KGI

அதனைத்தொடர்ந்து, 2020-2021 -ஆம் நிதியாண்டில், 10 மற்றும் 12ம் வகுப்பு படித்த 1,064 பெண்கள் மற்றும் பட்டம் படித்த 1,156 பெண்கள் என மொத்தம் 2,220 பயனாளிகளுக்கு ரூ.8.44 கோடி மதிப்பில் திருமண நிதி உதவித் தொகையும் மற்றும் ரூ.8.38 கோடி மதிப்பில் 17,760 கிராம் தாலிக்கு தங்கம் என மொத்தம் ரூ.16.82 கோடி மதிப்பில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் 8 கிராம் தாலிக்கு தங்கம் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன் முதற்கட்டமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 10 மற்றும் 12 -ம் வகுப்பு படித்த 10 ஊராட்சி ஒன்றியங்களில், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 70 பயனாளிகளுக்கு ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.26.44 இலட்சம் மதிப்பீட்டில் 560 கிராம் தாலிக்கு தங்கம், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் 51 பயனாளிகளுக்கு ரூ.12.75 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.19.26 இலட்சம் மதிப்பீட்டில் 408 கிராம் தாலிக்கு தங்கம்,

மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 43 பயனாளிகளுக்கு ரூ.10.75 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.16.24 இலட்சம் மதிப்பீட்டில் 344 கிராம் தாலிக்கு தங்கம் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் 55 பயனாளிகளுக்கு ரூ.13.75 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.20.77 இலட்சம் மதிப்பீட்டில் 440 கிராம் தாலிக்கு தங்கம்,

காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் 54 பயனாளிகளுக்கு ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.20.40 இலட்சம் மதிப்பீட்டில் 432 கிராம் தாலிக்கு தங்கம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 35 பயனாளிகளுக்கு ரூ.8.75 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.13.22 இலட்சம் மதிப்பீட்டில் 280 கிராம் தாலிக்கு தங்கம்,

தளி ஊராட்சி ஒன்றியத்தில் 47 பயனாளிகளுக்கு ரூ.11.75 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.17.75 இலட்சம் மதிப்பீட்டில் 376 கிராம் தாலிக்கு தங்கம், பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் 52 பயனாளிகளுக்கு ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.19.64 இலட்சம் மதிப்பீட்டில் 416 கிராம் தாலிக்கு தங்கம்,

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 60 பயனாளிகளுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.22.66 இலட்சம் மதிப்பீட்டில் 480 கிராம் தாலிக்கு தங்கம், ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில் 43 பயனாளிகளுக்கு ரூ.10.75 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் ரூ.16.24 இலட்சம் மதிப்பீட்டில் 344 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கப்படுகிறது.

PRO-KGI

**10 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 510 பெண்களுக்கு ரூ.1.27 கோடி மதிப்பில் திருமண நிதி உதவித் தொகையும் மற்றும் ரூ.1.92 கோடி மதிப்பில் 4,080 கிராம் தாலிக்கு தங்கம் என மொத்தம் ரூ.3.20 கோடி மதிப்பில் திருமண நிதி உதவித்தொகை மற்றும் தாலிக்கு 8 கிராம் தங்கம் முதற்கட்டமாக வழங்கப்பட உள்ளது.**

மேலும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2006 ஆம் ஆண்டு மூன்றாம் பாலினத்தவர்களுக்கு திருநங்கைகள் என்ற பெயரும், 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியமும் தொடங்கப்பட்டது. அவர்களைத்தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கைகளுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விதமாக நகரப்பேருந்துகளில் கட்டணமின்றி இலவச பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா நோய்தொற்று காலத்தில் திருநங்கைகளின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் கொரோனா நிவாரண உதவித்தொகை ரூ.2,000 வழங்க (03.06.2021) அன்று ஆணை பிறப்பித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் உள்ள 8,493 திருநங்கைகளுக்கு ரூ.1.69 கோடி மதிப்பில் கொரோனா நிவாரண உதவித்தொகை வழங்கப்படுகிறது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.2,000 வீதம் 254 திருநங்கைகளுக்கு ரூ.5.08 இலட்சம் மதிப்பீட்டில் கொரோனா நிவாரண உதவித்தொகை அவர்களுக்கு நேரடியாகவோ அல்லது வங்கி கணக்கிலோ வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, இன்று நலத்திட்ட உதவிகளை பெறும் அனைத்து பெண்கள், தாய்மார்கள் மற்றும் திருநங்கைகள் என அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அவர்கள் தெரிவித்தார்.

**தொடர்ந்து, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 10 பெண்கள் வீதம் 100 ஏழை பெண்களுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதி உதவி மற்றும் ரூ.37.78 இலட்சம் மதிப்பில் 800 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.**

**முன்னதாக, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் அவர்கள் கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் சமூக நலத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பெண்கள் சேவை மையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

PRO-KGI

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.சாய் சரண் தேஜஸ்வி இகாப., மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி.நா.மணிமேகலை நாகராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ப.பூங்குழலி மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திரு.இரா.மகிழ்நன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |

PRO - KGI